செய்தி வெளியீடு எண்: 17 நாள்: 11.05.2018.

### *தேனி மாவட்டம்,*
### *வீரபாண்டி அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில் சித்திரைப் பெருந்திருவிழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு திருத்தேரோட்டத்தினை வடம் பிடித்து துவக்கி வைத்தார்:-*

*****

தேனி மாவட்டம், வீரபாண்டி பேரூராட்சியில் அமைந்துள்ள வீரபாண்டி அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில் சித்திரைப் பெருந்திருவிழாவில் இன்று (11.05.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு திருத்தேரோட்டத்தினை வடம் பிடித்து துவக்கி வைத்தார்.

தமிழக அரசு தமிழ்ப் பண்பாட்டின் பெட்டகமாகவும், ஆன்மீகத்தின் இருப்பிடமாகவும், கலைத் திறனின் நிலைக் களமாகவும் விளங்குகின்ற திருக்கோயில்களின் சொத்துக்களை பாதுகாத்து பராமரிப்பதிலும், வழிபாடுகளை நடத்துவதிலும், அன்னதானம் உட்பட இறையன்பர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தருவதிலும் பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது.

தேனி மாவட்டத்தில் முக்கிய திருவிழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வரும் அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில் சித்திரைப் பெருந்திருவிழாவிற்கு தேர் செய்திட வேண்டி இறையன்பர்களின் நீண்ட நாள் கோரிக்கை வைக்கப்பட்டதன் அடிப்படையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி, இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் திருத்தேர் செய்திட ரூ.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து தேர் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இறையன்பர்களுக்கு அன்னதானம் வழங்கும் திட்டத்தின் கீழ் தினந்தோறும் வீரபாண்டி அருள்மிகு கண்ணீஸ்வரமுடையார் திருக்கோயில் மற்றும் கௌமாரியம்மன் திருக்கோயிலில் 200 இறையன்பர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. அன்னதானம் வழங்குவதற்கு ஏதுவாக ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் அன்னதானக்கூடமும் கட்டப்பட்டுள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பழமையான கோயில்களை பண்பாடு மாறாமல் புனரமைத்து குடமுழுக்கு செய்திட உத்தரவிட்டதன் அடிப்படையில் வீரபாண்டி அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயிலுக்கு 2014-ஆம் ஆண்டு குடமுழுக்கு செய்யப்பட்டது. கோயிலில் உள்ள உலோக சிற்பக்ங்கள் மற்றும் சாமி உற்சவ சிலைகளை பாதுகாத்திட வேண்டி உலோக சிலைகள் பாதுகாப்பு மையம் ரூ.1.5 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. கோயிலுக்கு வருகை தருகின்ற இறையன்பர்கள் மா விளக்கு எடுப்பதற்கு வசதியாக நீண்ட விசாலமான மண்டபம் அமைத்திட ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் மா விளக்கு மண்டம் கட்டப்பட்டுள்ளது. கோயில் நிர்வாக வசதிக்காக ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் கோயில் செயல் அலுவலர் அலுவலகம் கட்டி தரப்பட்டுள்ளது.

தமிழக அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் அமைந்துள்ள சிறு சிறு திருக்கோயில்கள் உட்பட சிறு சிறு கிராமப்புறத் திருக்கோயில்களிலும், நாள்தோறும் முறையாக பூஜை நடைபெறுவதற்கு தேவையான பித்தளை தாம்பாளம், தூபக்கால், மணி, கார்த்திகை விளக்கு மற்றும் தொங்கு விளக்கு ஆகிய உபகரணங்கள் ரூ.2,500/- மதிப்பீட்டில் பூஜை உபகரணங்கள் மாவட்டத்தில் வீரபாண்டி அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில் உட்பட 70 கோயில்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், தேனி பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஆர்.பார்த்திபன் அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.வீ.பாஸ்கரன் அவர்கள், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.டி.கே.ஜக்கையன் அவர்கள்,இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திரு.இர.பச்சையப்பன் அவர்கள், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு.சேதுராமன் அவர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பி.எம்.சையதுகான் அவர்கள், உதவி செயற்பொறியாளர் திரு.கருப்பையா அவர்கள், வீரபாண்டி பேரூராட்சி செயல் அலுவலர் திரு.செந்தில்குமார் அவர்கள், கோயில் செயல் அலுவலர்கள் திரு.பாலகிருஷ்ணன் அவர்கள், திருமதி.கிருஷ்ணவேணி அவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.டி.கணேசன் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**